පේෂකර්මාන්ත දෙපාර්තමේන්තුව

புடவைக் கைத்தொழில் திணைக்களம்

DEPARTMENT OF TEXTILE INDUSTRY



# රන් සළු

ரன் சலு | RAN SALU

## 2014 වර්ෂය සඳහා වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

## 2014 வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டு அறிக்கை

## ANNUAL PERFORMANCE REPORT 2014

**කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය**

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு

MINISTRY OF INDUSTRY AND COMMERCE

# நெசவுக் கைத்தொழில் திணைக்களம்

## 2014 வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டு அறிக்கை

### 01 அறிமுகம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சட்டத்திற்கு செய்யப்பட்ட 13ம் திருத்தத்திற்கு அமைய கைத்தறி நெசவுத் தொழில் தொடர்பான விடயம் மாகாண சபையின் கீழ் உள்ள விடயமாகும். அதன் பிரகாரம் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருப்பது அவ் விடயத்திற்குரிய கொள்கை ரீதியான தீர்மானங்களும் மையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மாகாண சபை நெசவுக்கைத்தொழில் பிரிவுடன் இணைந்து செயலாற்றுவதனூடாக தொழிலின் முன்னேற்றத்திற்குரிய சேவைகளை வழங்குதல்.

### 1.1 நோக்கம்

உள்நாட்டு தனித்துவம் மற்றும் கலாசாரத்திற்கு ஏற்றவகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை செயற்பாடுகளினை வெற்றிபெறக்கூடிய வகையில் கைத்தறி நெசவுக்கைத்தொழில் துறையில் ஆக்கபூர்வமான போட்டியடிப்படையில் முதல்தர துணி உற்பத்திக்காக உற்பத்தியாளர்களை ஈடுபடுத்துதல்.

### 1.2 குறிக்கோள்

அரச கொள்கை எல்லைக்குட்பட்ட கைத்தறி நெசவுத்தொழிலின் அபிவிருத்திக்காக குறித்த கொள்கையினை தயாரித்தல். அக்கொள்கையினை செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்கள் தேவையான சேவை மற்றும் வசதிகளை வழங்கலும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் இணைந்து செயலாற்றுவதனூடாக கைத்தறிநெசவுத்தொழில் துறையில் அளவிலும் தரத்திலும் வளர்ச்சியை ஏற்படுத்துதல்.

### 1.3 இலக்கு

01 கைத்தறி நெசவுக்கைத்தொழில் அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கையினை தயார் செய்தல்.

02 உற்பத்தி அபிவிருத்தியை நோக்காகக்கொண்ட வேலைத்திட்டத்தினை வழங்குதல்.

- சிறுமுயற்சியாளர் அபிவிருத்தி செயல்த்திட்டம்
- அலங்கார வேலைப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
- பயிற்சிவிப்பாளர்களுக்கு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டம்

03. கைத்தறி நெசவுக்கைத்தொழில் துறையின் அபிவிருத்திக்குத் தேவையான ஆலோசகர்கள் மற்றும் ஊழியர்களை பயிற்றுவித்தல்.

04. துறைக்குத் தேவையான உழைப்பாளர்களை பயிற்றுவித்தல்.

05. விநியோக வளர்ச்சி (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விநியோக நடவடிக்கைகளை ஒருங்கமைத்தல்)

06. கைத்தறி நெசவுத்தொழிலை விரிவுபடுத்துதலை நோக்காகக் கொண்ட பொருத்தமான வேலைத்திட்டம், சுயதொழில் மற்றும் மேலதிக சேவை வழங்கல் வேலைத்திட்டங்களை ஒருங்கமைத்தல்.

07. கைத்தறி நெசவுக்கைத்தொழிலில் அலங்கார அபிவிருத்தி மற்றும் பண்புசார் விருத்தியை நோக்காகக் கொண்ட கண்காட்சி மற்றும் போட்டிகள் நடாத்தப்படுதல்.

08. தேசிய கைத்தறி நெசவுக்கைத்தொழில் கண்காட்சி நடாத்துதல்.

09. கைத்தறி நெசவுத்கைத்தொழில் விருத்திக்குத் தேவையான ஆராய்ச்சி பரிசோதனை செய்தல் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள்.

10. புதிய தொழில்நுட்பத்தினை அறிமுகப்படுத்துதல் மற்றும் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகள்.

குறித்த இலக்கை அடைவதற்காக கீழ் குறிப்பிடப்படும் நிறவனம் இத் திணைக்களத்தின் கீழ் தற்போது செயற்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 01. ஆராய்ச்சி பயிற்சி அலங்காரம் மற்றும் பயிற்சி நிலையம், கடுபெத்த ( நெசவுக்கைத்தொழில் நூதனசாலை, ஆய்வுகூடம் உட்பட) | ~ | 01 |
| 02. இயற்கை நிறங்கள் செயற்திட்டம், ராஜகிரிய | ~ | 01 |
| 03. நெசவுத்தொழில் பயிற்சி பாடசாலை | ~ | 12 |
| 04. அலங்காரப் பயிற்சிப் பாடசாலை | ~ | 02 |

**2014/12/31ம் திகதிக்கு திணைக்களத்தின் ஊழியர் சபை**

**உயர் அதிகாரிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நெசவுக்கைத்தொழில் பணிப்பாளர் | ~ | 01 | |
| 2. | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | ~ | 01 | |
| 3. | உதவிப் பணிப்பாளர் (நிதி) | ~ | 01 | |
| 4. | நெசவுக்கைத் தொழில்நுட்ப விஞ்ஞானி | ~ | 01 | 04 |

**ஊழியர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | தொழில் அதிகாரி | ~ | 01 | |
| 2. | அபிவிருத்தி உதவியாளர் | ~ | 08 | |
| 3. | அரச முகாமைத்துவ உதவி சேவை | ~ | 14 | |
| 4. | நெசவு ஆலோசகர் | ~ | 59 | |
| 5. | நிறைவுறு உதவியாளர் | ~ | 01 | |
| 6. | சித்திர செய்முறையாளர் | ~ | 14 | 97 |

**சிற்றூழியர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சாரதி | ~ | 03 | |
| 2 | அலுவலக உதவி சேவையாளர் | ~ | 04 | |
| 3 | காவற்காரர் | ~ | 05 | |
| 4 | உதவிபெறும் காவற்காரர் | ~ | 05 | |
| 5 | தற்காலிக காவற்காரர் | ~ | 05 | |
| 6 | தொழிலாளர் | ~ | 08 | 30 |
| | மொத்தம் | | | 131 |

**புதிதாக இணைத்துக்கொள்ளல் மற்றும் ஓய்வு பெறல்**

2014ம் ஆண்டில் வெற்றிடமாகவுள்ள சிங்கள மொழி மூல நெசவு ஆலோசகர் பதவி 05 பூரணப்படுத்தப்பட்டதுடன் கீழ் குறிப்பிடப்படும் வகையில் அதிகாரிகள் ஓய்வு பெற்றுள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| நெசவு ஆலோசகர் | ~ | 06 |
| அலங்கார செய்முறையாளர் | ~ | 01 |
| சாரதி | ~ | 01 |
| காவற்காரர் | ~ | 03 |
| கொடுப்பனவு காவற்காரர் | ~ | 01 |

## 02. 2014 வருடத்தின் நிதி சம்பந்தமான வளர்ச்சி

### 2.1 ஒதுக்கீட்டின் உபயோகம்

2014 வருடத்தில் திட்டமிடப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு கீழ் குறிப்பிடப்படும் வகையில் சதவீதங்களில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

- முழு தேறிய மீண்டெழும் ஒதுக்கீட்டின் சதவீதமாக முழுப் பாவனை 98%
- முழு தேறிய மூலதன ஒதுக்கீட்டின் நூற்றுவீதத்தின் முழுப்பாவனை 92%

| செலவு விடயம் | | முழு தேறிய ஒதுக்கீடு (2014 வருடம்) (ரூபா) | மொத்தச் செலவு (ரூபா) | தேறிய விளைவு மிகுதி:.அதிகரிப்பு (ரூபா) | செலவு சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | **மீண்டெழும் செலவுகள்** | | | | |
| 1001<br>1002 | தனிநபர் சம்பளங்கள் | 54,000,000 | 47,053,865 | 6,946,135 | 87% |
| 1003 | | | | | |
| | ஏனைய மீண்டெழும் செலவுகள் | 373,680,700 | 371,617,067 | 2,063,633 | 99.5% |
| | | | | | |
| | **மூலதன செலவுகள்** | | | | |
| 2001 | கட்டிடமும் நிர்மாணமும் | 8,000,000 | 6,393,046 | 1,606,954 | 80% |
| 2003 | வாகனம் | 600,000 | 550,000 | 50,000 | 92% |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் | 1900,000 | 1,899,979 | 21 | 100% |
| 2401 | பயிற்சியளித்தலும் திறன் விருத்தியும் | 23,200,000 | 22,150,341 | 1,049,659 | 95.5% |

## 2.2 வருமானக் கணக்கு

நெசவுத் கைத்தொழில் திணைக்களம் சேவை வழங்கும் நிறுவனமொன்று என்பதனால் விசேட வருமானம் இல்லை.

## 2.3 அரச அதிகாரிகளின் முற்பண பீ கணக்கின் செயற்பாடு

| | உச்ச வரவு எல்லை ரூபா | குறைந்த கிடைக்கும் எல்லை ரூபா | உச்ச வரவு மீதி எல்லை ரூபா |
|---|---|---|---|
| வருடாந்த பகிர்வுக் கணக்கின் எல்லை | 5,000,000 | 2,900,000 | 30,000,000 |
| வருடாந்த உண்மைச் செலவுகள்(303011) | 2,465,000 | 2,946,176 | 13,897,306.91 |
| (303012) | 349,204 | 1,691,885 | |

## 3. வருடாந்த செயற்பாடுகள்

3.1 * கொட்டல நெசவுத்தொழிற்சாலை பயிற்சி நிலையக் கட்டிட அறை பிரித்தல், கதவு பொறுத்துதல் மற்றும் மலகூட குழி கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

* வட்டபுலவ நெசவுத்தொழிற்சாலை பயிற்சி நிலையத்தின் மலகூட மற்றும் குளியலறை பழுதுபார்த்தல்.

* திணைக்களத்தின் புதிய அலுவலக கட்டிடத்தின் ( ஓய்வூதியத் திணைக்களப் பிரிவில் அமைந்துள்ள) பழுது பார்த்தல் வேலைகள்

### 3.2 வலுவூட்டும் பிரிவு தொடர்பான நடவடிக்கைகள்

திணைக்களத்திலிருந்து தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ள வலுவூட்டும் நிறுவனம் தொடர்பான நடவடிக்கை மற்றும் அந் நிறவனங்களில் இருந்து தொழில் இழந்த ஓய்வூதியம் மற்றும் இழப்பீட்டிற்கு விண்ணப்பிக்கும் அதிகாரிகள் தொடர்பான நடவடிக்கைகள் இப் பிரிவிஹடாக செயற்படுத்தப்படும்.

1980/81/82 ஆண்டுகளில் தனியார் மயப்படுத்தப்பட்ட நெசவுக் கைத் தொழில் திணைக்களத்திற்குரிய வலுவூட்டும் வியாபார நிறுவனங்களில் சேவை செய்த 10 வருடத்திற்கு குறைந்த ஊழியர்களிற்கான இழப்பீட்டுத் தொகையொன்று வழங்குவதற்காக இல 12/0865515/004-1 மறறும் 2012-03-05ம் திகதிய அமைச்சுத் தீர்மானத்திற்கேற்ப குறித்த இழப்பீட்டுக் கொடுப்பனவொன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இங்கு ஊழியர்களின் சேவைக்காலத்தினை கருத்திற்கொண்டு இழப்பீட்டுக் ' கொடுப்பனவு பெற்றக்கொடுத்ததுடன் ஒரு வருடத்திற்காக ரூபா 17,000 இழப்பீடு வழங்கப்பட்டது. இவ் இழப்பீட்டு கொடுப்பனவு இரண்டு கட்டங்களாக செய்வதுடன் முதல் கட்டத்தின் கீழ் கூடியது ரூபா 50,000 க்கு உட்பட்டு 3600 அண்மிய ஊழியர் தொகைக்கு இழப்பீடு பெற்றுக் கொடுத்தல் செய்யப்பட்டது. 2014.12.31 திகதியாகின்ற போது கட்டம் I மற்றும் கட்டம் II கீழ் இழப்பீடு வழங்கப்பட்டது.

இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகின்ற போது இறந்திருந்த, இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்திருந்த, தேவையான தகஷ்தாவேசுகள் இல்லாததினால் இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போன ஊழியர்களிற்காக இழப்பீடு வழங்குவதற்கு இல.அ.அ.ப./1411476/515/023 மற்றும் 2014.11.20ம் திகதிய அமைச்சரவைப் பத்திர அனுமதியினைப் பெற்றுள்ளது.

### 3.3 நெசவுக் கைத்தொழில் பயிற்சி செயற்திட்டம்

- **நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்து பயிற்சியளித்தல்**

நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படுகின்ற நெசவுக்கைத்தொழில் பயிற்சி பாடசாலை 12 ஊடாக நெசவுத்தொழில் தொடர்பான ஆறு மாதகால அடிப்படைப் பயிற்சிப் பாடநெறி மற்றும் 13 மாதகால இறுதிச் சான்றிதழ் பாடநெறியினூடாக குறித்த பயிற்சியைப் பெற்றுக்கொடுத்தல்.

அதன் பிரகாரம் 2013/2014 கல்வியாண்டிற்காக 142 மாணவர்களை இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் பாடநெறியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற இறுதிச் சான்றிதழ் பத்திர பரீட்சைக்காக 117 மாணவர்கள் 2014 வருடத்தில் அமர்ந்தார்கள். அவ்வாறே 2014/2015 கல்வியாண்டில் பாடநெறியினை தொடர்தலிற்காக 2014.07.01 திகதி சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் தொகை 180 ஆகும்.

வேயங்கொடை, கொட்டல கைத்தறி நெசவுத்தொழில் பயிற்சி செயற்திட்டத்திற்கு ஒப்பாக ஆரம்பிக்கப்பட்ட கைத்தறி நெசவு நிலைய கல்வி நடவடிக்கைகள் 2014 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர் தொகை 16 ஆகும்.

- **நெசவுக்கைத்தொழில் அலங்காரப்பயிற்சி பாடசாலைகளுக்கு மாணவர்கள் இணைத்து பயிற்சி வழங்கல்**

நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற அலங்கார பயிற்சி பாடசாலைகள் இரண்டாகும். 2014 கல்வியாண்டிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிற்காக பாடநெறி இறுதியில் நடாத்தப்படுகின்ற அலங்கார பயிற்சி சான்றிதழ் பரீட்சை 2015 சனவரி மாதத்தில் நடாத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (கெட்டம்பே அலங்கார பயிற்சி பாடசாலையில் 11 மாணவர்கள் மற்றும் கடுபெத்த அலங்கார பயிற்சி பாடசாலை மாணவர் 05 பேர் என்ற வகையில்)

நெசவுக்கைத்தொழில் திணைக்களத்தில் செயற்படுத்தப்படுகின்ற நெசவுத்தொழில் பயிற்சி பாடசாலை மற்றும் அலங்கார பயிற்சிப் பாடசாலை.

- கடுபெத்த கைத்தறி நெசவு நிலையம
- வடபுலுவ கைத்தறி நெசவு நிலையம்
- கெட்டம்பே கைத்தறி நெசவு நிலையம்
- மாத்தளை கைத்தறி நெசவு நிலையம்
- பண்டாரவெல கைத்தறி நெசவு நிலையம்
- மாத்தறை கைத்தறி நெசவு நிலையம்
- கிரம கைத்தறி நெசவு நிலையம்
- பின்னவல கைத்தறி நெசவு நிலையம்
- போயகனே கைத்தறி நெசவு நிலையம்
- கோட்டல கைத்தறி நெசவு நிலையம்
- நல்லூர் கைத்தறி நெசவு நிலையம்
- சம்மாந்துறை கைத்தறி நெசவு நிலையம்
- அலங்கார பயிற்சிப் பாடசாலை, கடுபெத்த
- அலங்கார பயிற்சிப் பாடசாலை கெட்டம்பை

## 4 கைத்தறி நெசவுத் தொழில் விற்பனை மேம்படுத்தல் வேலைத்திட்டம்

- தேசத்திற்கு மகுடம் சூட்டுதல் தேசிய அபிவிருத்தி கண்காட்சி

  2014 பெப்ரவரி மாதம் குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் சூட்டுதல் தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் கைத்தறி நெசவுத் தொழில் படைப்பு உள்ளடங்கிய கண்காட்சிக் கூடமொன்று நடைபெற்றது.

- கைத்தறி நெசவுதொழில் விற்பனைக் கூடம்

  உள்நாட்டு கைத்தறி நெசவுத்தொழில் உற்பத்தியாளர்களிற்காக விற்பனை சந்தர்பங்களை பெற்றுக்கொடுத்து மக்களிடையே கைத்தறி பிடவையினைப் பிரபலப்படுத்துதலும் அதற்காக அதிக கேள்வியினை ஏற்படுத்துதலும் நோக்காகக் கொண்டு 2014 மார்ச் மாதம் கொடும்பு, கோட்டை கண்காட்சி மற்றும் கருத்தரங்கு மண்டப வளாகத்தில் நடாத்தப்பட்டது.

- கைத்தறி பிடவை போட்டி மற்றும் தேசிய கண்காட்சி

  கைத்தறி நெசவுத்தொழில் தரத்தினைக் கூட்டுதல் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனையினை நோக்காகக் கொண்டு உள்நாட்டு உற்பத்திசெய்கின்ற கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஈடுபடுகின்றவர்களின் திறமையினை வளர்ப்பதற்கு , ஊக்குவித்தல் மற்றும் அவர்களின் திறமையினை பாராட்டுதலிற்காக வருடாந்தம் நடாத்தப்படுகின்ற தேசிய கைத்தறி பிடவைக் கண்காட்சி மற்றும் சான்றிதழ் வழங்கல் 2014 டிசெம்பர் மாதம் 20 – 24 திகதிகளில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட உள்ளது.

## 5 சேவை பயிற்சி செயற்திட்டம்

நெசவுக் கைத்தொழில் முகாமையாளர்கள், சிறுமுயற்சியாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் வரை சென்றடையும் வகையில் நெசவுத்தொழிலின் வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி வேலைத்திட்டம் மற்றும் கருத்தரங்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல் மற்றும் தயார்படுத்துதல் இதன் கீழ் நடைபெறும்.

நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் ஊழியர் சபை, மாகாண அரசு, கூட்டுறவு, தனியார் பிரிவுகளின் கைத்தறி நெசவுத் தொழில் துறையில் உள்ளடக்கப்படுபவர்களின் வினைத்திறனை மேம்படுத்துதலை நோக்காகக் கொண்டு வருடாந்த செயற்பாட்டு திட்டத்தினை நோக்காகக் கொண்டு 2014 கீழ் குறிப்பிடப்படும் வகையில் பயிற்சி நெறி 41 பயிற்சியாளர்கள் 1036 பேரிற்காக நடாத்தப்பட்டன.

| பயிற்சி வேலைத்திட்டம் | உத்தேச குழு |
|---|---|
| i நெசவுத் தொழிலுடன் தொடர்புடைய பாடநெறி 36 | மாகாண சபை, கூட்டுறவு மற்றும் தனியார் பிரிவுகளில் நெசவுத் துறைகளில் ஈடுபாடுள்ளவர்களிற்காக 727 பேரிற்காக |
| ii தரத்தினை ஊக்குவிக்கும் மனப்பாங்கை ஏற்படுத்தும் வேலைத்திட்டம் 04 | நெசவுப் பாடசாலை மாணவர்கள் 289 பேரிற்காக |
| iii உற்பத்தித்திறன் பயிற்சி வேலைத்திட்டம் | நெசவுப் பாடசாலை அதிகாரிகள் 20 பேரிற்காக |

## 6 பரீட்சை நடாத்துதல்

**நெசவுத்கைத்தொழில் பயிற்சி பாடநெறி தொடர்பான பரீட்சை நடாத்தப்படல்**

- நெசவுக்கைத்தொழில் இறுதிச்சான்றிதழ் பத்திரம் மற்றும் அடிப்படை பயிற்சி பாடநெறிகளிற்குரிய குறித்த பரீட்சை நடவடிக்கைகள் 2014 ஜூலை மாதம் நடாத்தப்பட்டது. இதற்காக நெசவுப்பாடசாலை மாணவர்கள் மற்றும் வெளி விண்ணப்பதாரர்கள் 163 பேர் பங்குபற்றினர்.

- ஒரு வருட அலங்கார பயிற்சி பாடநெறியினை பயில்வதற்காக 2014 சனவரி மாதம் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களிற்கான பாடநெறி இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சை 2015 சனவரி மாதம் நடாத்தப்படுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<u>திணைக்கள அதிகாரிகளிற்காக நடாத்தப்படுகின்ற தடைதாண்டல் பரீட்சை</u>

- திணைக்களத்தில் நெசவு ஆலோசகர் ஐஇ ஐஐஇ ஐஐஐ என்ற பதவிகளிலும் சித்திர காட்சியாளர் மற்றும் உதவியாளர் என்ற பதவிகளின் கீழும் வேலை செய்கின்ற அதிகாரிகளிற்காக குறித்த திறமை தடைதாண்டல் பரீட்சை 2014.12.05 , 2014.12.13 திகதிகளில் திணைக்களத்தின் கடுபெத்த பிரிவில் நடாத்தப்பட உத்தேசித்துள்ளது.

7 2015 தெயட கிருள கண்காட்சி ஏற்ப ஆரம்பிக்கப்பட்ட மாத்தறை, தலல்ல, கைத்தறி நெசவுக்கைத்தொழிலில் செயற்திட்டத்தின் பயிற்சியாளர்கள் 24 பேரிற்காக பயிற்சி மற்றும் கைத்தறி உபகரணங்கள் இலவசமாக பெற்றுக்கொடுப்பதினூடாக கைத்தறி நெசவுத்தொழில் துறையில் ஈடுபடும் பயிற்சி தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

8 புடவை உற்பத்தித் துறையின் வரலாறு பற்றிய சிறந்த படைப்பொன்றினைக் கொண்ட, கடுபெத்த பரிசீலனை, பயிற்சி, அலங்கார மற்றும் சேவை நிறுவனப் பகுதியில் உள்ள நெசவுத்தொழில் நூதனசாலை தொடர்பான ரூபவாஹினி நிகழ்ச்சி நிரலொன்றினை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

09 மேல் மடம்பெல்ல கைத்தறி நெசவுத்தொழிற் செயற்திட்டம் 111 ம் கட்டத்தின் கீழ் பயிற்சியினைப் பெற்றுக்கொடுத்த பயணாளிகள் 70 பேரிற்கு, தேவையான நூல் விலைக்கு வாங்கல் மற்றும் கைத்தறி தேவைகளிற்கேற்ப கைத்தறி 25 வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

10 சிறந்த பலனைப் பெறக்கூடிய வழியொன்றாக கைத்தறி நெசவுத்தொழிலினை கிராம மட்டத்தில் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் பயனாளிகள் 56 பேரிற்காக வேயங்கொடை, கொட்டல கிராமத்தில் கைத்தறி நெசவுத்தொழில் செயற்திட்ட நிலையமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

11 நெசவுத்தொழில் திணைக்களத்தின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்ற நெசவுத்தொழில் பயிற்சி பாடசாலைகளில் கற்கும் முறைமையினை விரிவுபடுத்தும் முறைமைக்காக பயிற்சி பாடநெறிகளில் அந்தந்த பாடத்திற்கமைய கைநூல் 05 வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

12 மட்டக்களப்பு, பாலமுனை பிரதேசங்களில் ஆரம்பித்த நெசவுத்தொழில் பயிற்சி, நிறம் தீட்டல் விநியோக நிலையம் அமைத்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல்.

13 நெசவுத்தொழில் திணைக்களத்திற்குரிய இணையத்தளமொன்றினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்

14 நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளுக்குத் தேவையான நூல் மற்றும் உபகரணங்களை விலைக்கு வாங்கப்பட்டது.

15 நெசவுத் தொழில் பயிற்சி பாடசாலைகளில் நெசவுத்தொழில் பயிற்சி பாடநெறியினைத் தொடர்கின்ற மாணவர்களிற்காக நடாத்தப்படுகின்ற ஆங்கிலப் பயிற்சிப் பாடநெறி 2014 ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

16 நெசவுத்தொழில் பயிற்சிப் பாடசாலை கல்வி கற்கின்ற அனைத்து மாணவர்களிற்காக வருடத்திற்கான சீருடை 02 சோடி வழங்கப்பட்டது.

17 2014 கைத்தறி நெசவுக்கைத்தொழில் கண்காட்சிக்காக சமுகமளிக்கின்ற திணைக்கள அதிகாரிகளிற்காக சீருடையொன்று தயாரிக்கப்படுத்தப்பட்டது.